**அபி வெனுவென் அபி நிதியம் - 2025**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அபி வெனுவென் அபி நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினம், எனைய விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனியார் தொலைபேசிக் கம்பனி ஒன்றுடன் இணங்கியிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஏதாவது மாதம் ஒன்றுக்கு உரிய வாடகை வருமானம் அடுத்து வரும் மாதத்தில் நிதியத்திற்கு செலுத்த வேண்டி இருந்த போதிலும் இரண்டு மாதங்களை விஞ்சிய கால தாமதத்துடன் ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,506,908 தொகை கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டிற்கு உரிய நிலுவையாய் இருந்த கோபுர வருமானம் தற்போது இந்த நிதியத்திற்கு கிடைத்திருந்ததுடன் அதன் பிரகாரம் கடிதத்தின் மூலம் மேலும் கிடைக்க வேண்டிய ரூபா 3,464,174 நிலுவை கோபுர வருமானத்தை அறவிடுவதற்காக சகல கம்பனிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | தனியார் தொலைபேசிக் கம்பனியுடன் இணங்கியிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் கோபுர வருமானங்களை அறவிடுவதற்கும், அதற்கான ஆக்கபூர்வமாக மேற்பார்வைத் திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய சட்டத்தின் 09 ஆம் பிரிவு | ‘‘அபி வெனுவென் அபி நிதியம்’’ என்ற பெயரில் இலங்கை மத்திய வங்கியின் நிதியம் ஒன்றாகப் பேணிச் செல்ல வேண்டியதுடன் அந்த சட்டத்தின் 7 ஆவது பிரிவின் கீழ் நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பணம் அந்த கணக்கிற்கு செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் நிதியத்தால் இலங்கை மத்திய வங்கியில் அவ்வாறான கணக்கு ஒன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக 02 அரசாங்க வங்கிகளில் 04 கணக்குகள் மற்றும் தனியார் வங்கியில் 02 கணக்குகளாக 06 கணக்குகள் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | புதிய மத்திய வங்கிக் கணக்கு ஒன்றை ஆரம்பிப்பதற்காக எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்கு குறித்துரைத்த முகாமைத்துவ சபைக் கூட்டத்திற்கு சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் நிதியம் ஒன்றாகப் பேணிச் செல்வதற்கும், சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை அந்தக் கணக்கில் செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டம் மற்றும் அதன் திருத்தப்பட்ட சட்டம் | 2024 யூன் 07 ஆந் திகதிய உள்நாட்டு இறைவரி பிரதி ஆணையாளர் நாயகத்தின் கடிதம் மூலம் நிதியம், உழைக்கப்படுகின்ற பணத்தின் அளவில் நிறுத்தி வைத்தல் வரியை உள்ளடக்கி வருமான வரியின் கீழ் வருகின்றமை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான வரி பணிகளுக்காக பதிவு செய்தல் மற்றும் உரிய வரி அறிக்கையை சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான வரி செலுத்துவதற்காக பதிவு செய்து வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான வரி நடவடிக்கைகளுக்காக பதிவு செய்து உரிய வரிப் பொறுப்புக்களை உரிய பிரகாரம் இனங்கண்டு செலுத்துவதற்கும், குறித்துரைத்த கால எல்லையில் உரிய வரி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 1/2020 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1)(இ) | எதிர்வரும் ஆண்டின் பாதீடு நிதியத்தின் நோக்கங்களின் பிரகாரம் தயாரித்து ஆளுகைச் சபையின் அங்கீகாரத்துடன் நடப்பாண்டின் செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான பாதீடு சமர்ப்பித்தல் 2024 நவம்பர் 06 ஆந் திகதி வரை தாமதம் அடைந்து இருந்ததுடன் ஆளுகைச் சபையின் அங்கீகாரம் இன்றி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2023 மே 30 முதல் 2024 திசெம்பர் 16 ஆந் திகதி வரை முகாமைத்துவ சபைக் கூட்டம் நடாத்தப்படாமையின் காரணமாக முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிப்பதற்கு முடியாது இருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் குறித்துரைத்த திகதிக்கு முன் பாதீடு தயாரித்து ஆளுகைச் சபையின் அங்கீகாரத்துடன் திறைசேரிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2025 மார்ச் 05 ஆந் திகதிய PFD/RED/REG/F&C/ 2025/DEF என்ற அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | தொலைத் தொடர்பு கோபுரங்களை நிர்மாணித்தல் மற்றும் பயன்படுத்துவதற்காக கிடைக்க வேண்டிய வாடகைப் பணம் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்க வேண்டி இருந்த போதிலும் 03 தனியார் கம்பனிகளில் இருந்து கிடைக்கப் பெற்ற ரூபா 137.19 மில்லியன் வருமானம் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்காமல் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அரச நிதித் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்துடன் கலந்துரையாடப்படுவதாக சனாதிபதி செயலகத்திற்கு கடிதம் மூலம் 2026 ஏப்ரல் 28 ஆந் திகதி கோரிக்கை விடப்பட்டதுடன் எதிர் காலத்தில் அந்த கலந்துரையாடல் மூலம் வழங்கப்படுகின்ற ஆலோசகையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தொலைத் தொடர்பு கோபுரங்களை நிர்மாணித்தல் மற்றும் பயன் படுத்துவதற்காக கிடைக்கின்ற வாடகைப் பணம் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சாதாரண வட்டி விகிதத்தின் கீழ் சனவரி முதல் திசெம்பர் வரையான காலத்தில் முறையே ரூபா 2.69 மில்லியன் முதல் ரூபா 23.33 மில்லியன் வரையான வீச்சில் காசு மீதி ஒன்று | ஒவ்வொரு மாத இறுதியின் போதும் அடுத்து வரும் மாதத்தில் எதிர் காலத்தில் செலுத்துவதற்குள்ள செலவினங்கள் மற்றும் நிதியத்தின் முகாமைத்துவக் | நிதியத்தின் நாளாந்த மற்றும் குறுங்கால நிதித் தேவையினை கவனத்தில் கொண்டு காணப்படுகின்ற மிகைப் பணத்தை இனங்கண்டு அவற்றை உயர்ந்த வட்டி |

| | | |
|---|---|---|
| நிதியத்தின் முகாமைத்துவ வங்கிக் கணக்கில் பேணிச் செல்லப்பட்டிருந்தது. எனினும் அந்த மிகைப் பணத்தை உயர்ந்த வட்டி விகிதத்தின் கீழ் குறுகிய கால முதலீடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கின் மீதியை பகுப்பாய்வு செய்து அரச வங்கிகளில் குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விகிதத்தின் கீழ் குறுங்கால முதலீடுகளுக்காக ஈடுபடுத்தி நிதியத்திற்கு ஆகக் கூடிய வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 339,152,298 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 119,816,332 ஆகும். இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 219,335,966 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. நிதியத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற முழுமையான மற்றும் அரை வீட்டு செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் நிதி செலவிடாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைவடைந்தமை மீளாய்வாண்டின் மிகை அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரணஜயபுர வீடமைப்புத் தொகுதியின் 160 நலனாளிகளால் சகல தவணைப் பணமும் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டமைக்கான தகவல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இருதரப்பினராலும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 2 ஆவது பிரிவின் பிரகாரம் தவணைப் பணம் செலுத்தி முடித்த நபர்களுக்கு வீடுகளின் உரித்தை கையளிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த வீட்டு நலனாளிகளுக்கு உரிய கையளித்தலை மேற்கொள்வதற்கு தவறியிருந்தது. | ரணஜயபுர வீடமைப்புத் தொகுதியின் மொத்த தவணைப் பணமும் செலுத்தி முடிவடைந்த வீட்டு நலனாளிகளின் பெயர் பதிவேடு 2026 ஏப்ரல் 28 ஆந் திகதிய கடிதம் மூலம் இப்பலோகம பிரதேச செயலகத்திற்கு விடுவிப்பு படிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் பணம் செலுத்தி முடிவடைந்துள்ள வீட்டு நலனாளிகளுக்கு உரித்தைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டில் 300 அரைப் பகுதி பூர்த்தி வீடுகள் மற்றும் முழுமையான வீடுகள் 20 இற்காக ரூபா 340,000,000 உதவித் தொகை செலுத்தி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்த ஒரு வீட்டிற்காகவும் நிதி உதவி வழங்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் அரை மற்றும் முழுமையான வீடுகளுக்காக 2024 ஆம் ஆண்டிற்குரிய ரூபா | 2025 இன் அரை வீடுகள் / முழுமையான வீடுகள் கோரி இருந்த சகல நலனாளிகளுக்கும் முப்படைகளின் நலன்புரி பிரிவிற்கு வீட்டு உதவி வழங்கப்படாது இருந்ததை உறுதிப்படுத்துவதற்காக பிரகடனக் கூற்று ஒன்று நலனாளிகளிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதற்காக கவனத்தில் கொள்ளக் கூடிய | வீட்டு நலன்களை தெரிவு செய்தல் மற்றும் தேவையான தகவல்களை உறுதிப்படுத்தலை விரைவாக மேற்கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டத்தை அடைந்து கொள்வதற்கும், கடந்த ஆண்டுகளுக்கு உரிய செலுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| 22,456,942 மற்றும் 2023 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 1,181,172 மேலும் செலுத்த வேண்டி இருந்தது. | காலம் எடுத்ததன் காரணமாக மீளாய்வாண்டின் போது வீட்டுத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. | காணப்படுகின்ற உதவித் தொகைகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதுகாப்பு இராணுவ முகாம்கள் அமைந்துள்ள காணிகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 49 தொலைத்தொடர்பு சமிஞ்சை கோபுரங்களை சார்ந்த மின்சார தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு வசதிகளை அமுல்படுத்தி முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதன் மூலம் உழைக்கப்படுகின்ற வருமானத்தை நிதியத்திற்கு செலுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் 03 தனியார் தொலைபேசிக் கம்பனிகளுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறு தனியார் தொலைபேசிக் கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்த குறித்துரைத்த அதிகாரம் தொடர்பான போதியளவான சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் அந்த அதிகாரப் பலத்தை உறுதிப்படுத்தவும் முடியாதிருந்தது. | தொலைபேசிக் கம்பனிகளுடன் உடன்படிக்கை செய்யும் போது அதற்கான அதிகார கையளித்த குறித்த அதிகாரத்தரப்பினர் யார் என்பது தொடர்பாக தொழில்நுட்ப பிரிவில் இருந்து விசாரிக்கப்பட்டதுடன் உரிய தகவல்களைக் கண்டறிய முடியாதுள்ளது. | உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதற்கு முன் அதற்காக குறித்துரைத்த அதிகாரம் உள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 இன் 06 ஆம் இலக்க அப்பி வெனுவன் அபி நிதிய சட்டத்தின் 11(6) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை என்பன பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் நிதியத்தின் ஆரம்பத்தில் இருந்து 2024 ஆம் ஆண்டு வரையான காலத்திற்காக அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அங்கீகாரத்திற்காக தயாரிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பு பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் கொள்கைகள் பிரிவிற்கு 2026 மார்ச் 12 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் குறித்துரைத்த கால எல்லையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |